பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 03 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உகாதி, **Sukladi, Gudi Padava** உள்ளிட்ட பண்டிகைகளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி மேம்பாட்டு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டதன் மூலம் தூய்மை எரிசக்தி உற்பத்தி விரைவுபெறும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. மேற்குவங்கத்தில் 11 மாவட்ட தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

4. ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக், உத்தராகண்ட் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மெக்சிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்விக் போலிபள்ளி - அர்ஜுன் கதே இணை காலிறுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உகாதி, Sukladi, Gudi Padava, Cheti Chand, Navreh, Sajibu Cheiraoba பண்டிகைகளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த புனிதமான நாட்களில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் தமது வாழத்துகளை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டு பிறப்பை ஒட்டி கொண்டாடப்படும் இந்த பண்டிகைகள் நாட்டின் வளமான கலாச்சார பன்முகத்தன்மையையும், இயற்கை உடனான நமது தொடர்பையும் அடையாளப்படுத்துவதாக கூறியுள்ளார்.

புதிய நம்பிக்கைகள், புதிய தீர்மானங்கள், நேர்மறையான மனப்பான்மையுடன் வாழ்க்கையில் முன்னேற நம்மை இந்த நாள் ஊக்குவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்பண்டிகைகள் அன்பு, நல்லிணக்கம் ஆகியவற்றின் மூலம் நாட்டின் பல்வேறு சமூகத்தினர் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி

மகிழ்ச்சியையும், செழுமையையும் அளிக்கட்டும் என்று குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி மேம்பாட்டு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டதன் மூலம் இந்த முன்முயற்சி தூய்மை எரிசக்தி உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை விரைவுபடுத்தும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இம்முடிவு வடகிழக்குப் பிராந்தியங்கள், கிராமப்புற மற்றும் மலைப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாடு முழுவதும் 100 தொழில்துறை பூங்காக்களை அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதன் மூலம் ஒவ்வொரு பிராந்தியத்தின் பொருளாதார திறனும் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் விரைவான வளர்ச்சிப் பயணத்தையும், மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் உறுதி செய்யும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் சில மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

கூச்பிஹார், ஜல்பைகுரி, மால்டா, முர்ஷிதாபாத், நாடியா, வடக்கு மற்றும் தெற்கு 24 பர்ஹானா உள்ளிட்ட 11 மாவட்டங்களில் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக பணியாற்றிய ஆட்சியர்களை இடமாற்றம் செய்துள்ளது.

முன்னதாக காவல்துறை தலைமை இயக்குநர் நிலையிலான 5 காவல் துறை அதிகாரிகளையும் தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

அபொறுப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் இன்று மாலை 3 மணிக்குள் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு தேர்தல் தொடர்பான பணிகள் ஒதுக்கப்படாது என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் பழங்குடியினரின் பாரம்பரியம் கைவினைத் திறன் மற்றும் தொழில்முனைவை எடுத்துக்காட்டும் பாரத் பழங்குடியினர் திருவிழா புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

இதைத் தொடங்கி வைத்துப் பேசிய மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம், இந்தப் பழங்குயினர் திருவிழா, இந்திய பழங்குடியின சமூகத்தின் வளமான பாரம்பரியங்கள், படைப்புதிறன் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக கூறினார்.

இதன் மூலம் பழங்குடியின கலைஞர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

200 அரங்குகள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும், 300க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இந்தப் பழங்குடியினர் திருவிழாவில் பங்கேற்றுள்ளதாகவும், பழங்குடியின நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் 120 பழங்குடியின சமையல் கண்காட்சியாளர்களும், 400 நடனம் மற்றும் இசைக் கலைஞர்களும் இந்தப் பழங்குடியினர் திருவிழாவில் பங்கேற்றுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இலங்கையில் டித்வா புயலால் சேதமடைந்த **Chilaw-Thoduwawa** சாலைப் பகுதியில் இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்ட பாலம் நேற்று திறக்கப்பட்டது.

இப்பாலத்தை இலங்கை அமைச்சர் திரு. **Abayarathna,** இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா ஆகியோர் திறந்து வைத்தனர்.

கொழும்பு - புட்டாலம் கடலோர பிராந்தியத்தில் பொதுமக்கள் வசதிக்காக இலங்கை நிர்வாகத்துடன் இணைந்து இந்திய ராணுவத்தின் பொறியியல் குழுவினர் இப்பாலத்தை கட்டியுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஜா, இலங்கையில் **7** மாகாணங்களில் சேதமடைந்த **40** பகுதிகளில் இந்திய பொறியியல் குழு மறு கட்டமைப்பு பணியில் ஈடுபடும் என்று தெரிவித்தார்.

வரும் காலங்களில் சுமார் **15** பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இந்திய தூதர் கூறினார்.

<<<<>>>>

மேற்காசிய பிராந்தியத்திற்கு இன்று 48 விமானங்களை ஏர்-இந்தியா மற்றும் ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள் இயக்க உள்ளன.

ஜெட்டா, மஸ்கட் நகரங்களுக்கான வழக்கமான சேவைகளும் இதில் அடங்கும்.

தில்லி, மும்பையில் இருந்து தலா ஒரு விமானத்தை இரு மார்க்கங்களிலும் ஏர்-இந்தியா நிறுவனம் இயக்க உள்ளது.

தில்லியில் இருந்து ரியாதிற்கு 2 விமானங்களை இரு மார்க்கத்திலும் ஏர்-இந்தியா இயக்க திட்டமிட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியாவுக்கு 30 சிறப்பு விமானங்களும் இயக்கப்பட உள்ளதாக ஏர்-இந்தியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம், பெங்களூரு, ஹைதராபாத், கோழிக்கோட்டிலிருந்து விமானங்களை இயக்க உள்ளது.

மஸ்கட்டில் இருந்து தில்லி, கோழிக்கோடு, மும்பை நகரங்களுக்கு 6 விமானங்களை இயக்க உள்ளது.

<<<<>>>>

தில்லியில் நேற்று மாலை லேசானது முதல் மிதமன மழை பெய்தது.

அங்கு கடந்த சில நாட்களாக வெப்பம் அதிகரித்து வந்த நிலையில் இம்மழை மக்களுக்கு இதமான சூழலை ஏற்படுத்தியது.

இந்நிலையில் ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக், உத்தராகண்ட் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிராவின் மத்திய பகுதி, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தராகண்ட், மேற்கு உத்தரப்பிரதேச மாநிலங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கத்தாரில் ராஸ் லஃபான் தொழில்துறை நகரத்தில் ஈரான் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இதனால் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் உடனடியாக அனுப்பப்பட்தாக கத்தார் அரசு கூறியுள்ளது.

இதில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரான் தூதர்கள், ராணுவம் மற்றும் பாதுகாப்பு தூதர்கள் மற்றும் பணியாளர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கத்தார் வெளியுறவு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ஈரான் தூதரகத்தில் உள்ள 2 ராணுவ தூதர்கள் 24 மணி நேரத்தில் வெளியேறுமாறு கத்தார் தெரிவித்துள்ளது.

தோஹா மீது தொடர்ந்து ஈரான் தாக்குதல் நடத்தியதை அடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கத்தார் அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

மெக்சிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ரித்விக் போலிபள்ளி - அர்ஜுன் கதே இணை காலிறுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Lamens - Winegar** இணையை வென்றது.

-------------

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் கலியாந்த் பூனச்சா - போலந்தின் **Szymon Walkow** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் சில ஆட்டங்களுக்கு ஹைதராபாத் அணியின் கேட்டனாக இஷான் கிஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த அணியின் கேப்டன் பேட் கமின்ஸ் காயமடைந்துள்ளதையடுத்து, இஷான் கிஷன் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அபிஷேக் ஷர்மா துணைக் கேப்டனாக செயல்படுவார் என்று அந்த அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**19 03 2026 7 15 Sports-2**

பேட் கமின்ஸ் காயத்தில் இருந்து குணமடைந்த பின் மீண்டும் கேப்டனாக பொறுப்பேற்பார் என்று ஹைதராபாத் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

------------

**Orleans Masters** பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷா ராணி பருவா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-19, 21-19** என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **Amalie Schulz**-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை **21-15, 21-9** என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**<<<<The End>>>>**